2026 ஜூலை மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 11/2026

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW7(LW8) – பிரபாகரன் |
| தகப்பனார் பெயர்: | முருகேசன் |
| ஊர்: | அன்னஞ்சி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | எலக்ட்ரீசியன் |
| வயது : | 35 |

29.07.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், தேனி வட்டம், அன்னஞ்சியில் வசித்து வருகிறேன். நான் எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன். கடந்த 10.04.2024ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் அல்லிநகரம் போலீசார் திருவிழாவில் நடந்த பிரச்சனை சம்பந்தமாக விசாரித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், கோபாலகிருஷ்ணன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த

பார்வை மகஜர் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 முதல் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

2. நான் வேலை முடித்து எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் இரவு 8.00 மணி இருக்கும். நான் 8 மணிக்கு வந்த சமயம் போலீசார் இருந்தார்களா என்றால் இல்லை. நான் அ.சா.ஆ.5 ல் கையொப்பம் செய்யும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் மறுநாள் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த பார்வை மகஜரை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னிடம் படித்துக் காட்டவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

3. திருவிழா சமயத்தில் பந்தல், மைக் செட், போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆர்ச்சில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தது என்றால் இல்லை. ஆர்ச்சில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன என்றாலும், போலீசாரின் கையிருப்பு சாட்சி என்பதால் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.29 17:01:30 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
29.07.2026